திருநெல்லிக்கா கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியரும்
H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும்
"அற்புதக்கனி"–"திருமுருகாற்றுப்படை விளக்கம்"
ஆசிரியருமாகிய

திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

ஸ்ரீ நெல்லிவனநாத சுவாமி தேவஸ்தானம்
திரு. A. A. வெங்கடாசலம் B. A. அவர்கள்
நிர்வாக அதிகாரி.

திரு. KM. KR. SM. அருணசலம் செட்டியார் அவர்கள்
மானேஜிங் டிரஸ்டி. (புதூர்)

திரு. M. சாமிநாத முதலியார் அவர்கள், டிரஸ்டி.
(பாம்புகந்தநல்லூர்)

திரு. MN. K. மீனட்சிசுந்தரஞ் செட்டியார் அவர்கள்
டிரஸ்டி, (திருவாரூர்)

தர்மகர்த்தர்கள் ஆகியோரால் வெளியிடப்பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

1956

உரிமை செய்யப்பெற்றது] [விலை 2 அணா

Q23:38.21193
N56

சென்னை மாநில

இந்து அறநிலைய பாதுகாப்புக் கழகம்

ஆணையாளர் :

திரு. A. உத்தண்டராம பிள்ளை I. A. S. அவர்கள்

துணை ஆணையாளர் :

திரு. S. கணேசம் பிள்ளை B. A. அவர்கள்

உதவி ஆணையாளர் :

திரு. A. சர்க்கரை சேர்வை B. A. B. L. அவர்கள்

இன்ஸ்பெக்டர் :

திரு. V. சுப்பையன் அவர்கள்

(மன்னார்குடி டிவிசன்)

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
112781
EGMORE, MADRAS

முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா-மன்னார்குடி தாலுகாவில் காவிரிக்குத் தென் கரையில் உள்ள தலங்களில் தேவாரப்பதிகம் பெற்ற திருநெல்லிக்கா என்னும் தலமும் ஒன்றாகும். தேவலோகத்திலுள்ள மரங்கள் இத்தலத்தில் நெல்லி மரங்களாக அமைந்ததென்பது வரலாறு. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious & Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு தல புராணத்தைத் தழுவிச் சுருக்கமாய் எழுதப்பெற்றுத் துணை ஆணையாளர் அவர்களால் பார்வையிடப்பெற்றது. பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், சமயப் பிரசாரத்துள் முக்கியமான தல வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும் தற்போதைய ஆணையாளர் (Commissioner) திரு. A. உத்தண்டராம பிள்ளை I. A. S. அவர்களும், துணை ஆணையாளர் (Dy. Commissioner) திரு. S. கணேசம் பிள்ளை B. A. அவர்களும், உதவி ஆணையாளர் (Asstt. Commissioner) திரு. A. சர்க்கரை சேர்வை B. A. B. L. அவர்களும் தக்கன செய்து வருகிறார்கள். இதில் ஆலய விளக்கமும், கல்வெட்டுச் செய்திகளும், புராண வரலாறுகளும், துதிப் பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்துத் திருநெல்லிக்கா இறைவனின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
மலைக்கோட்டை
15—12—54

R. பஞ்சநதம் பிள்ளை,
தமிழ் ஆசிரியர்.

உள்ளடக்கம்

			பக்கம்
1.	கோயிலும் இருப்பிடமும்	...	1
2.	தலத்தின் பெயர்கள்	...	4
3.	கோயிலின் அமைப்பு	...	6
4.	மூர்த்திகளின் பெயர்கள்	...	7
5.	தீர்த்தங்கள்	...	8
6.	தலப் பெருமைகள்	...	10
7.	திருப்பணிகள்	...	12
8.	வழிபட்டோர்	...	13
9.	தினப்பூஜையும் திருவிழாக்களும்	...	13
10.	வருமானமும், சொத்துக்களும்	...	14
11.	நிர்வாகம்	...	14
12.	கல்வெட்டுக்கள்	...	15
13.	புராண வரலாறுகள்	...	17
14.	இலக்கியங்கள்	...	26
15.	பார்வையாளர் குறிப்பு	...	

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 .. 1957

திருநெல்லிக்கா கோயில் வரலாறு

அறத்தால் உயிர்காவல் அமர்ந்தருளி
மறத்தான் மதில்மூன்றுடன் மாண்பழித்த
திறத்தால் தெரிவெய்திய தீவெண்திங்கள்
நிறத்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே.

1. கோயிலும் இருப்பிடமும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த ஆதி அந்தமில்லாத பரம்பொருளும், உலகம் அனைத்தினுக்கும் உறுதுணையாய் நின்று காப்பவனும் ஆகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவநிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளிப் பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் மூலம் கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்தின் கீழ் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு

அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுதுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன் பர்க்கே" (சிவஞான சித்தியார்). ஆதலின் பெறுதற் கருமையான மனிதப் பிறப்பைப்பெற்ற மாந்தர் அனைவரும் பசுபதியாகிய பரமனை அன் பினால் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியிற் சென்று அவனருளைப்பெற முயலுதல் தலையாய கடமையாகும். "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத் தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறி யுள்ளார்.

நமது முன்னோர்களின் நாகரிக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிச் சிற் பங்கள் நிறைந்த சேகரங்களாகும். இவைகளை முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாது காத்துப் பின்வழியினராகிய நமக்கு அருஞ்செல் வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில் கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன. 'கோயில் விளங்கக் குடிவிளங்கும், ஆலயந்தொழு வது சாலவும் நன்று' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவைகளில் சைவ சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங் களும், தேவாரப் பதிகங்களில் தலப்பெயர் மட்டும்

குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தலபுராணங் களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப்பாடல்கள் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் தோன்றிய அபிமானத் தலங்களும் மிகுதியாக உள்ளன. அவைகளில் தேவாரப் பதிகம் பெற்ற தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் கா என்ற முடிபைப்பெற்ற கோயில்களில் **திருநெல்லிக்கா** என்னும் தலம் ஒன்று. மற்றவை திருவானைக்கா, திருக் கோலக்கா, திருக்கோடிக்கா, திருக்குரக்குக்கா என்பன. கா என்பது சோலை, நெல்லிமரங்களைச்சோலை யாக உடையதால் திருநெல்லிக்கா என்று பெயர் ஏற்பட்டது என்றும், வற்றாத புனலுடைய காவிரி நதி பாயும் சோழநாட்டில், தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகாவில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள பல தலங்களில் திருநெல்லிக்கா என்னும் தலம் உள்ளது. திருவாரூர் - திருத்துறைப் பூண்டி இருப்புப் பாதையில் திருவாரூரிலிருந்து மூன்றாவதாயுள்ள திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே ஒரு பர்லாங் தூரத்திலும், திருவாரூர்-திருத்துறைப்பூண்டி மோட்டார் Bus மார்க்கத்தில் 8வது மைலில் உள்ள பாங்கல் கைகாட்டி இடத்திலிருந்து மேற்கே 2மைல் தொலைவிலும் உள்ளது. இவ்வூரின் ஜனத்தொகை சுமார் 1000. கிளைத் தபால் நிலையமும், P. W. Section ஆபீசும், கூட்டுறவுப் பண்டகசாலையும் இருக்கின்றன. ஊரில் பள்ளிக்கூடம் இல்லை. 4 பர்லாங் தூரத்திலுள்ள புதூரில்தான் இருக்கிறது. ஊரில் உள்ள பிள்ளைகள் அவ்விடத்திற்குச் செல்கிறார்கள். உள்ளூரில் பள்ளிக்கூடம் தொடங்க ஏற்பாடுநடைபெறுகிறது. ஊரிலும், கோயிலிலும் மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. செருவாமணி பஞ்சாயத் தாட்சியில் ஊராட்சி நடைபெறுகிறது. நெல் ஏற்

ற்றுமதி செய்யும் முக்கிய இடங்களில் இவ்வூர் ஒன்று. திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திற்குப் பக்கத்தில் பாம்புகந்தநல்லூர் சாமிநாத முதலியார் அவர்களுடைய சத்திரம் ஒன்றுண்டு. இவ்வூரில் நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி ஆகிய மூன்று தாலூகாக்களும் சேர்ந்திருக்கின்றன. கோயில் இருப்பது மன்னார்குடி தாலூகாவைச் சேர்ந்தது. இத்தலத்திற்குக் கிழக்கில் திருக்காறைவாயில் என்னும் திருக்காருயிலும், தெற்கில் வில்வவனமும், மேற்கில் திருத்தேங்கூரும், வடக்கில் திருநாட்டியத்தான்குடியும் எல்லைகளாக அமைந்துள்ளன.

2. தலத்தின் பெயர்கள்

இக்கோயிலின் பெயர் தேவாரப் பாடலின்படி திருநெல்லிக்கா என்பது. பிற்காலத்தில் திருநெல்லிக்காவல் என வழங்குகிறது. வடமொழிப் பெயர் ஆமலகவனம் என்பது. தேவலோகத்தில் உள்ள கற்பகம் முதலிய 5மரங்களும் இவ்விடத்தில் நெல்லி மரங்களாக அமைந்தமையால் இப்பெயர்கள் ஏற்பட்டன. இத்தலத்துக்குரிய மரங்களாக மூன்று நெல்லிமரங்கள் தற்போதும் உள்ளன. மேலும் இத்தலத்திற்கு அருணநகரம், சகியாமலபுரம், பிரமதீர்த்தபுரம், குட்டரோகஹரம், மங்களாபுரம், சர்வோத்தமபுரம், ஆனந்தபுரம், அமிர்தானந்த பஞ்சாட்சரமூர்த்திபுரம், பஞ்சதீர்த்தபுரம், பஞ்சகூடபுரம், அமிர்தவித்யாபுரம் முதலிய பெயர்களும் வழங்கும். இவ்வைகள் புராணத்தில் சொல்லப்பட்டவை.

சூரியன் வழிபட்டதால் அருணநகரம் என்றும் பிரமதீர்த்தத்தைக் கொண்டிருப்பதால் பிரம்ம

தீர்த்தபுரம் என்றும், திவ்யரூபன் என்ற கந்தர்வனுக்குண்டான குட்டநோய் நீங்கப்பெற்றதால் குட்டரோகஹரம் என்றும், மங்களாம்பிகை அவதரித்த காரணத்தால் மங்களாபுரம் என்றும், திருவாரூர், சிதம்பரம் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபடும் பயன்கள் இத்தலத்தில் எளிதில் கிடைப்பதால் சர்வோத்தமபுரம் என்றும், இன்பந்தருவதால் ஆனந்தபுரம் என்றும், பஞ்சாட்சரமாகிய ஐந்தெழுத்துக்களும் இறைவனைப் பூசிப்பதால் பஞ்சாட்சரபுரம் என்றும், ஐந்து தீர்த்தங்களையுடையதால் பஞ்சதீர்த்தபுரம் என்றும், ஐந்து ஊர்களைக் கொண்டிருப்பதால் பஞ்சகூடபுரம் என்றும், பெருமானருளால் அமுதம் கிடைக்கப்பெற்றதால் அமிர்தவித்யாபுரம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

நெல்லியும் இறைவனும்:– நெல்லிக்காய் திரிபலை வர்க்கத்தில் ஒன்று. மற்றவை கடுக்காய், தான்றிக்காய் என்பன. நெல்லிக்காயை உணவுப் பொருள்களில் கறியாகவும், ஊறுகாயாகவும், தைலமாகவும் உபயோகிப்பர். உண்ட உணவைச் செரிக்கச் செய்து நீண்ட வாழ்நாளை அளிக்கவல்லது. அதிகமான் என்ற வள்ளல் கொடுத்த நெல்லிக் கனியை ஔவையார் உண்டு நெடுங்காலம் வாழ்ந்ததாக வரலாறு. வெளிப்படையாகப் புலப்படும் பொருள்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென்றும், கரதலாமலகம் என்றும் உதாரணமாகச் சொல்வதுண்டு. நெல்லியின் தன்மையைப்போல நெல்லிவன நாதனும், தன்னைப் பக்தியுடன் வழிபடும் அடியார்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தையும் நாசப்படுத்தி அருள் செய்கின்றான். "விரும்பும் ஒருவர்க்குக் கைத்தலஞ் சேர்

தரு நெல்லிக்கனி யொக்கும்" என்று திருமூலர் கூறுகின்றார்.

3. கோயிலின் அமைப்பு

மருத நிலமாகிய வயல்களுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் சோலைகளும், வாவிகளும் நீரோடைகளும் சூழ்ந்துள்ளன. கோயில் மேற்கு நோக்கியது. முன்னுள்ள சுமார் 80 அடி உயரமுள்ள இராஜ கோபுரம் 5 கண்களையும், 5 கலசங்களையும் கொண்டு ஐந்நிலைமாடமாக அமைந்துள்ளது. கோபுரத்தின் மேலுள்ள நீல நிற மின்விளக்கு இரவில் நெடுந்தூரம் தெரியும்படி விளங்குகிறது. கோபுரத்துக்கு வெளியே மண்டப நந்தியும், கொடிமரமும் உள்ளன. கோயிலுக்குள் ஒரு பிரகாரமும்,வெளியில் இரண்டு பிரகாரங்களும் உள்ளன. 2-ம் பிரகாரத்தில் 3 பக்கங்களிலும் கோயில் நந்தவனம் உள்ளது. 3-ம் பிரகாரத்தில் தேரோட்டம் நிகழும். உள் பிரகாரத்தில் மேற்கில் விநாயகர், முருகன், சனீஸ்வரன் முதலிய சந்நிதிகளும், வடபுரத்தில் நெல்லி மரத்தின் அடியில் நெல்லிவன நாதரும், கீழ்புறத்தில் யாகசாலை, வைரவர், சூரியன் சந்நிதிகள், மாலை கட்டி மண்டபம், மடைப்பள்ளி முதலிய இடங்களும் இருகிணறுகளும் அமைந்துள்ளன. தெற்கில் அழகாகக் கட்டப்பெற்ற 12 கால் மண்டபம் உள்ளது. அதற்கு எதிரில் பிரம்ம தீர்த்தக்குளம் இருக்கிறது. உள் மண்டபத்தில் மூலவராகிய நெல்லிவனநாதர் மேற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. அதற்கு நேர்முகத்தில் தான் குளம் உள்ளது. கோயில்களில் பெரும்பாலும் அம்மன் சந்நிதிக்குப் பக்கத்திலேயே குளங்கள் அமைந்திருக்கும். புறத்தே உள்ள அழுக்குகளை நீர் போக்குவதுபோல, மாந்தர்களின் மனமாசுகளை

தேவி தன் கருணை நீரால்—அருட் புனலால் நீக்குகிறாள். "நெஞ்சத்தழுக்கை யெல்லாம் நின் அருட் புனலால் துடைத்தனை" என்று அபிராமிபட்டர் கூறுகிறார். மண்டபத்தின் மேலிடங்களில் நவக்கிரகங்கள், பன்னிரண்டு ராசிகள், திருமாலின் பத்து அவதாரங்கள் ஆகிய சித்திரங்கள் பல நிறங்களில் தீட்டப்பெற்றுள்ளன. மண்டபச் சுவர்களில் இத்தலத்தைப் பற்றிய புராண வரலாறுகள் சித்திரங்களாக வரையப்பெற்றுள்ளன. இடையிடையே நல்ல கருத்துக்களையுடைய பல நீதி மொழிகள் ஆங்காங்கு எழுதப்பெற்றுள்ளன. இவைகளில் சில பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. மண்டபத்தில் சோமாஸ் கந்தர் நடராஜர், முதலிய மூர்த்திகள் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. எனவே உள் மண்டபம் சிறியதாய், அழகியதாய், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே வசப்படுத்த வல்லதாய், மின் விளக்குகளால் மிக ஒளியுடையதாய், சந்நிதிகளில் நின்று வழிபடும் காலத்தில் அகஒளியாகிய ஞானத்தையும் அருள வல்லதாய் அமைந்துள்ளது.

கோயிலுக்கு வெளியே வசந்த மண்டபமும், சேர்வாடியும், நெற்களஞ்சியமும், தேவஸ்தான அலுவலகமும் அமைந்துள்ளன. கோயிலின் பரப்பு கிழமேலடி 188. தென் வடலடி 107.

4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் தீர்த்தக் கரையில் உள்ள விநாயகருக்குப் படித்துறைப் பிள்ளையார் என்ற பெயர் வழங்குகிறது. மூலமூர்த்திக்கு நெல்லிவன நாதர் என்றும், அம்மனுக்கு மங்கள நாயகி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. கல்வெட்டில் ஆமலகேஸ்வரி என்று குறிக்கப்படுகிறது. இவைகளை

யன்றி மூலமூர்த்திக்கு ஆமலக மகாலிங்கம், அமிர்த லிங்கம், மங்கள லிங்கம், ஆதிலிங்கம், மூலலிங்கம், வியட்டி லிங்கம், சமட்டி லிங்கம், சமஸ்த லிங்கம், மூலசோமகரன், சோமபிரகாசி, ஆமலகேசன், ஆனந்த மோகன், சதுர்வேதபுரீசன், ஆமலகேந்திர சோமானுக்கிரகன் முதலிய பெயர்களும் புராணத்தால் சொல்லப்படுகின்றன. "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரந் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்றும் திருவாசக வரிகளும் இவைகளை நினைப்பூட்டும். இறைவனுடைய அருவுருவத் தன்மைக்கு அடையாளமாய் உள்ளது சிவலிங்கம். காணப்படாத அருவமும், காணப்படும் உருவமும், சிவலிங்கத்தில் அமைந்துள்ளது. "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணுகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" என்று சேக்கிழாரும் காட்டுகின்றார்.

5. தீர்த்தங்கள்

"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றபடி ஒரு காலத்தில் பூலோகத்தில் பருவமழை பெய்யாத காரணத்தால் உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மிகவும் துன்பம் அடைந்தன. தேவர் முனிவர் யாவரும் சேர்ந்து திருநெல்லிக்காவை அடைந்து பெருமானிடம் எக்காலத்தும் நீர்வற்றுதிருக்கும் தீர்த்தங்களைத் தந்தருள வேண்டுமென்று முறையிட்டார்கள். அப்போது நெல்லிவன நாதர் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு வந்து தமது சூலப்படையால் இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்களை உண்டு பண்ணித் தமது சடையிலுள்ள கங்கை நதியின் துளிகளைச் சேர்ப்பித்தார். அந்தத் துளிகள் பெருவெள்ளமாகி ஐந்துதீர்த்தங்களிலும் நிரம்

பின. அவைகள் முறையே சூரிய தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கர தீர்த்தம், நோய் நிவாரண தீர்த்தம், சந்திர தீர்த்தம் எனப் பெயர்பெறும். இவைகளின் முழு விவரம் பின்னே காட்டப்பெறும்.

1. சூரிய தீர்த்தம் :- இது கோயிலுக்கு வடக்கில் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ளது. சூரியன் மூழ்கி வழிபட்டதால் இப்பெயர் அமைந்தது. இதில் சிறப்பாக ஆவணி, கார்த்திகை மாதங்களிலும், பிற நாட்களிலும் மூழ்கி வழிபடுவோர் கண்ணொளி பெறுவதுடன் இட்டசித்திகளையும் பெறுவர்.

2. பிரம்ம தீர்த்தம்:- இது அம்மன் கோயிலுக்கு எதிரில் உள்ள தெப்பக்குளம். பிரமன் இக்குளத்தில் மூழ்கிப் பெருமானை வழிபட்டதால் இப்பெயர் எய்தியது. இதில் மூழ்கி வழிபடுவோர் சகலபாவங்களிலிருந்தும் நீங்கப்பெறுவர். இதன் நீளம் கிழமேலில் 357 அடி. அகலம் தென்வடலில் 182 அடி.

3. சக்கர தீர்த்தம் :- இது கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது. திருமால் வழிபட்டுச் சக்கராயுதம் பெற்றதால் இப்பெயர் ஏற்பட்டது. இதில் மூழ்கி வழிபடுவோர் வேண்டும் வரங்களைப் பெறுவர்.

4. ரோக நிவாரண தீர்த்தம்:- இது கோயிலுக்கு வடபால் சக்கர தீர்த்தத்தின் கீழ்புறம் உள்ளது. திவ்ய ரூபன் என்ற கந்தர்வன் வழிபட்டுப் பெருமானருளால் தனது குட்டரோகம் நீங்கப்பெற்றதால் இப்பெயர் எய்தியது. இதில் மூழ்குவோர்க்குத் தீராத நோய்கள் தீரும்.

5. சந்திர தீர்த்தம் :- இது கோயிலுக்கு வடக்கில் ஓடும் விண்ணாறு. சாபம்பெற்ற சந்திரன் இந்நதியில் மூழ்கி வழிபட்டு மெய்யொளி பெற்றதால்

இப்பெயர் ஏற்பட்டது. சந்திர நதியென்றும் பெயர் பெறும். விநாயகர் காக்கை வடிவங்கொண்டு அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்த போது கமண்டல நீர் நதியாக ஓடியதால் காக நதி என்றும் பெயர் பெறும். இதில் மூழ்குவோர் சகல பாவங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும் நீங்கப் பெறுவர்.

6. தலப் பெருமைகள்

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்றும் மூன்றினுலும் சிறப்புடையது. "தருத்தங்கு நெல்லிக்கா" என்று ஆன்றோர் கூறியபடி தேவலோகத்திலுள்ள ஐந்துதருக்களும் இத்தலத்தில் நெல்லி மரங்களாக அமைந்த பெருமை உடையது. கற்பகத்தரு, நினைத்ததைக்கொடுக்கும் தன்மை உடையதுபோல நெல்லிவன நாதரும் அடியார் வேண்டுவதை அளிக்க வல்லவராய் உள்ளார். ஐந்து தீர்த்தங்களையுடையது. பிரமன், திருமால், சூரியன், சந்திரன், சனி, கந்தர்வர் முதலியோர் வழிபட்டது. துர்வாசரின் கோபம் நீங்கப்பெற்றது. ஆமலகேச சோழனுல் ஆதித்திருப்பணி செய்யப் பெற்றது. உத்தம சோழனுக்குத் தேவியே புதல்வியாகத் தோன்றிப் பெருமானை மணஞ்செய்து கொண்டது. தூய ஒழுக்கமுடைய சுசன்மா என்னும் அந்தணனுக்கு அருள் செய்தது. ராஜ ராஜ தேவன், வீர ராஜேந்திர தேவன் முதலிய சோழ மன்னர்களால் ஆதரிக்கப் பெற்றது. திருவாரூர்த் தியாகேசப் பெருமானே மணமகனாக வந்த பெருமையுடையது. விராட் புருடனுக்கு மூலாதார நகரான திருவாரூருக்குத் தெற்கில் உள்ளது.

திருநாட்டியத்தான்குடி, திருக்காரூயில், திருநமசிவாயபுரம், திருத்தேங்கூர், திருநெல்லிக்காவல் என்னும் ஐந்து தலங்களும் சேர்ந்து பஞ்சகூட்புரம் என்னும் பெயர்பெற்றது. ஆண்டுதோறும் மாசி மாதம் 18ந்தேதி முதல் ஒருவாரம் வரையில் மாலை நேரத்தில் சூரிய ஒளி மூலமூர்த்திமீது படுவதுண்டு. இதைச் சூரிய பூஜையாகச் சொல்லப்படும். நீர்வளம் நிறைந்த வயல்களின் நடுவில் கோயில் அமைந்துள்ளது. மூலமூர்த்தியும், அம்மனும், ஆதிசோழனும் நெல்லியின் பெயரால் ஆமலகேசன், ஆமலகேஸ்வரி, ஆமலகேச சோழன் என்னும் பெயர்களைப்பெற்றது. பஞ்சாட்சரத்தால் பூசிக்கப்பெற்றது. பிறத்தல், தரிசித்தல், நினைத்தல், இறத்தல், முதலியவைகளால் வெவ்வேறு இடங்களில் கிடைக்கும் புண்ணியப் பயன்கள், இத்தலத்தில் எளிதாய்க் கிடைக்குந் தன்மை உடையது. மந்திரங்களுள் பஞ்சாட்சரமும், விரதங்களுள் சோமவார விரதமும் மலைகளுள் மேருமலையும், பசுக்களுள் காமதேனுவும் யானைகளுள் ஐராவதமும்சிறந்துவிளங்குவனபோல மூர்த்திகளுள் நெல்லிவன நாதர் ஆமலகேசர் சிறப்புடையவர். சூரியனைக் கண்ட இருட்டும், சிங்கத்தை கண்ட யானையும்போல, ஆமலகேசனைக் கண்ட அஞ்ஞானம் நீங்கும். கருடனைக் கண்ட பாம்பைப் போலவும், நெருப்பைக் கண்ட பஞ்சு போலவும் இப்பெருமானைத் தரிசித்தவர்களின் பாவங்கள் நீங்கிப்போகும். உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் நெல்லியைப்போல, நெல்லிவனப் பெருமானும் அடியார்களின் தீவினைகளை நசிக்கச் செய்கிறான். நெல்லிவன நாதர் சந்நிதியில் செய்யப்பட்ட செபம், தானம், தவம், முதலியன சிறிதாயினும் பெரும்பயன் தரும். இலக்கிய வகையில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர்

அருளிய தேவாரப் பாடல்களைகளையுடையது. திருஞான சம்பந்தர் இத்தலப் பெருமையை புக ரேதுமிலாத புத்தேனுலகில் நிகரா நெல்விக்கா'' என்று காட்டியுள்ளார்.

7. திருப்பணிகள்

புதிய கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப்புதுப்பித்தல் மிக்க புண்ணி யத்தைத் தரும் என்பர். புராணப்படி ஆமலகேச சோழன் என்பவன் திருக்கோயிலையும், திருநகரத் தையும் அமைத்துத் திருப்பணி செய்தான். அதன் பிறகு அவ்வப்போது பல திருப்பணிகள் நடை பெற்றதாகத் தெரிகிறது. திருப்பணி தொடங்கு வதற்குமுன் காகம் ஒருவர்க்கு நற்சகுணம் காட்டிய தாகச் சொல்லப்படுகிறது. சுமார் 50 ஆண்டு களுக்குமுன் சு. பெரி. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களால் இராஜகோபுரத் திருப்பணியும், அரி மளம் முத்தடைக்கப்பச் செட்டியார் அவர்களால் அம்மன் கோயில் திருப்பணியும், புதுவயல் குழந் தையஞ் செட்டியார் அவர்களால் பிரமதீர்த்தமாகிய தெப்பக்குளத் திருப்பணியும் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த லால்குடி என்னும் திருத்தவத்துறை நிலக்கிழார் **கனகசபைப் பிள்ளை** அவர்களால் புதிய தேர்த்திருப்பணி நிறை வேறியிருக்கிறது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு 1939ம் ஆண்டில் உள் பிரகாரத்தில் தளவரிசை போடப்பட்டுப் பிற இடங்கள் செப்பனிடப்பட்டன. கோயிலைச் சுற்றியுள்ள நந்தவனம், கானாடுகாத் தான் கா. அ. மு. கா. காசிச் செட்டியார் அவர் களின் பொருட் செலவில் பரிபாலம் நடந்துவரு கிறது. அதற்காகச் சில நிலமும் மூலதனமாகவைத் திருக்கிறார்கள். 1951-ம் ஆண்டில் மின்சார விளக்கு

கள் அமைக்கப்பெற்றன. மேலும் பல திருப்பணி கள் நடைபெற வேண்டியிருப்பதால், செல்வம் யடைத்த சிவநேசச் செல்வர்கள் திருப்பணிகளை நிறைவேற்றி வைப்பார்களாக.

8. வழிபட்டோர்

இத்தலத்துப் பெருமானை பிரமன், திருமால், சூரியன், சந்திரன், சனி, கந்தர்வர், துர்வாசர், சுசன்மா முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றுள் ளார்கள். சோழர்களில் ஆமலகேச சோழன், உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன், முதலிய மன்னர்கள் வழிபட்டு நற்கதியடைந்துள் ளார்கள். சைவ சமயாச்சாரியர்களாகிய திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் இத்தலத் திற்கு வந்து பெருமானை வழிபட்டுப் பதிகம் பாடி யுள்ளார்கள்.

9. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இத்தலத்தில் உறையும் பெருமானுக்கும் பிற மூர்த்திகளுக்கும் தினந்தோறும் விடியல், காலை, உச்சி, மாலை, இரவு, நள்ளிரவு ஆகிய ஆறு காலங் களிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் பிரம் மோற்சவமாகிய பெருவிழா நடைபெறும். அப் போது தெப்ப விழாவும் தேரோட்டமும் நடை பெறும், 10 நாட்கள் வரையில் சுவாமி பல வாக னங்களில் புறப்பட்டு வீதிவலம் வரும். 10ம் நாள் மிருகசீரிட நாளில் தேரோட்டம் நிகழும் ஆவணி மாதம் முதல் வெள்ளிக்கிழமையில் மங்கள நாயகி யின் திருக்கல்யாணவிழாவும் நிகழும் புரட்டாசியில்

நவராத்திரி விழாவும், ஐப்பசியில் கந்தர் சஷ்டி உற்சவம் ஆறு நாட்கள்வரை நடைபெறும். அடுத்த நாள் வள்ளி தெய்வயானை திருமணம் நிகழும். கார்த்திகை சோம வாரங்களில் சங்காபிஷேகமும் நடைபெறும். கடை ஞாயிற்றுக்கிழமையில் சூரிய தீர்த்தத்தில் பெருமான் காட்சி கொடுப்பர். கார்த்திகைப் பெருநாளில் சொக்கப்பானை கொளுத்தப் பெறும். மார்கழியில் திருவாதிரை நாளில் நடராஜர் புறப்பட்டுத் தரிசனம் கொடுப்பர். தைப்பொங்கல் நாளில் அம்பாள் புறப்படும். தைப்பூச நாளில் பெருமான் விண்ணாற்றிற்குப் புறப்பட்டுச் சென்று தீர்த்தம் கொடுப்பர். மாசி மாதம் சிவராத்திரிநாளில் நான்கு கால பூஜைகள் நிகழும். 18-ந்தேதி முதல் ஒரு வாரம் வரையில் மூல மூர்த்தியின்மேல் சூரிய ஒளி படிகிறது. இது சூரிய பூஜை எனப்படும்.

10. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்கு 293 ஏக்கர் நன்செய் நிலங்களும், 70 ஏக்கர் புன்செய் நிலங்களும் திருநெல்லிக்காவலிலும், சுற்றுக் கிராமங்களிலும் இருக்கின்றன. ஆண்டுதோறும் எல்லா வகையிலும் சேர்ந்து சுமார் ரூ. 25000 இருபத்தையாயிரம் வருமானம் வரும்.

11. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் 1947-ம் ஆண்டு வரையில் தஞ்சை தேவஸ்தான கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு சென்னை

அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious & Charitable Endowinents) நேர்நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அதன்படி நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரி கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். மேற்படி ஸ்தாபனத்தால் நியமிக்கப்பெற்ற அறங்காவலர்களும் உடனிருந்து கவனித்து வருகிறார்கள்.

112781

12. கல்வெட்டுக்கள்

இக்கோயிலுக்குரிய 8 தமிழ்க் கல்வெட்டுக்கள் உள் பிராகாரத்தில் சுவாமி, அம்மன் கோயில்களின் சுவர்களிலும், அடிப் பீடங்களிலும் உள்ளன. அவைகள் கவர்ன்மென்டாரால் நகல் எடுக்கப் பெற்றுள்ளன. அவை 1904ம் ஆண்டில் 520 முதல் 527 வரை உள்ள எண்களாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளன. அவைகளின் விவரம் வருமாறு :-

" TIRUNELLIKAVAL - One of the south Kaveri Cemtres of saivaitisom. It has been sung by Gnana sambanda ".

1. 520-1904. நடுவிலுள்ள ஆமலகேஸ்வரர் கோயிலின் வடசுவரில் உள்ளது. சோழ மன்னன்-திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜ தேவனது 21வது ஆட்சி ஆண்டில் கோயிலுக்கு நிலம் வழங்கியது.

2. 521. அதே இடத்திலுள்ளது. சிதைந்ததும் முடிவு பெறாததுமான கல்வெட்டு. மேற்படி சோழ மன்னனது 20வது ஆண்டில் நிலம் வழங்கியது.

3. 522. அதே இடத்திலுள்ளது. சிதைந்த கல்வெட்டு. மேற்படி அரசனது 20வது ஆண்டில் ஏற்பட்டது.

Q 23:38, 21193.
N56

4. 523. மேற்படி இடத்தில் உள்ளது. மேல் கண்ட ராஜ ராஜ சோழனது 9வது ஆண்டில் ஏற்பட்டது. ராஜேந்திர சோழவள நாட்டின் பிரிவான அருவான கூற்றத்திலுள்ள திருநெல்லிக்கா இறைவர் திருநெல்லிக்கா உடையார் என்று அழைக்கப் படுகிறார். (The god is called the Lord of Tirunellika)

5. 524. மேற்படி கோயிலின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சுவர்களில் உள்ள சிதைந்த கல்வெட்டு. திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜ தேவ சோழனது ஆட்சியில் ஏற்பட்டது.

6. 525. அதே இடத்தில் உள்ளது. சோழ மன்னன் திரிபுவன சக்கரவர்த்தி வீர ராஜேந்திர தேவனது 7வது ஆண்டில், கோயிலில் விளக்கெரிப் பதற்காகப் பொருள் வழங்கியது.

7. 526. மேற்படி கோயிலின் தென்சுவரில் உள்ளது. மிகவும் சிதைந்த கல்வெட்டு. சோழ மன்னன் ராஜ ராஜ தேவனது 31 வது ஆண்டில் ஏற்பட்டது.

8. 527. அதே சுவரில் உள்ளது. மேற்படி சோழ மன்னனுடைய 4வது ஆண்டில், கோயிலில் விளக்கெரிப்பதற்காகப் பொருள் வழங்கியது. இவைகளால் அறியப்படும் செய்திகளாவன:- முற்காலத்தில் இத்தலப் பகுதி அருவாள கூற்றம் என்பதும், இது ராஜேந்தி சோழவள நாட்டைச் சேர்ந்த ஒரு பிரிவு என்பதும் தெரியவருகின்றன. இக்கோயிலின் பெருமான் திருநெல்லிக்கா உடையார் என்றும், ஆமலகேஸ்வரர் என்றும் வழங்கப் படுகிறார். சோழ மன்னர்களான ராஜ ராஜதேவன் ராஜேந்திரதேவன்-இவர்களுடைய ஆட்சிக் காலங்

களில் கோயிலுக்கு நிலங்களும், விளக்கெரிப்பதற்குப் பணமும் வழங்கப் பெற்றன. சில கல்வெட்டுக்கள் சிதைந்துபோனதால் அவற்றின் விவரங்கள் புலப்படவில்லை.

13. புராண வரலாறுகள்

இத்தலத்தின் பெருமையைத் தெரிவிக்கும் புராணம் ஒன்று உரை நடையில் உள்ளது. அதில் தலவிசேடப் படலம் முதல் திருவிழாப்படலம் வரையில் 17 படலங்கள் உள்ளன. திருமாலின் அம்சமாகிய அயக்கிரீவ முனிவர், அகத்திய முனிவருக்குத்திருநெல்லிக்காவின் பெருமைகளை உபதேசித்ததாக வரலாறு. இவைகளில் முக்கியமானவை சில சுருக்கிக் கூறப்படும்.

1. நெல்லிவன வரலாறு

தேவலோகத்திலுள்ள கற்பகம், சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம் என்னும் ஐந்து தருக்கள் மரங்கள் வேண்டுவார் வேண்டியதைத் தரும் தன்மை உடையவை. அம்மரங்கள் கொடையில் தமக்கு யாரும்நிகரில்லை என்று கருதிச் செருக்குற்றிருந்தன. ஒரு சமயம் துர்வாசர் வந்தபோது மரங்கள் அவருககு வழிபாடு செய்யவில்லை. இதனால் கோபங்கொண்ட முனிவர் அவைகளைநோக்கி'' நீங்கள் மிகவும் செருக்குற்றிருந்ததால் பூலோகத்தில் நெல்லி மரங்களாகி உழலக் கடவீர்'' என்று சபித்தனர். உடனே அத்தருக்கள் நெல்லிமரங்களாகிப் பூலோகத்தில் பலஇடங்களிலும் உழன்று நல்வினையால் இத்தலத்துக்கு வந்து பெருமானுக்கு நிழல் தந்து வழிபாடு செய்தன. பெருமான் அவைகளுக்கு அருள் செய்து முக்காற்பங்கு இத்தலத்திலும், காற்பங்கு தெவலோகத்திலும் இருக்கும்

படியாகக் கட்டளையிட்டார். "தருத்தங்கு செல்லிக்கா" என்று ஆன்றோரும் கூறினர். இதனல் செருக்குற்றார் சீர் இழப்பர் என்பது விளங்குகிறது.

2. சூரியன் வழிபட்டது

வானில் உலாவும் சூரியன் ஒளிக்கணங்களில் சிறந்தவன். தினங்களை வரையறுப்பதால் தினகரன் எனப்படுவான். ஏழுகுதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத் தேரில் ஊர்ந்து உலகத்திற்கு ஒளி தருவன். இவ்வளவு பெருமையுடையவன் ஒரு தவறு செய்து விட்டான். சிறுவிதி என்றும் தககன் சிவபெருமானை அழையாமல் விலக்கி ஓர் யாகம் செய்தான். அதற்குத் தேவரும், முனிவரும், பிறரும் சென்றனர். சூரியனும் சென்றிருந்தான். சிவபெருமான் தனது அம்சமான வீரபத்திரரை ஏவித்தக்கன் யாகத்தை அழிக்கக் கட்டளையிட்டார் வீரபத்திரர் யாகசாலையை நெருங்கிய அளவில் பலர் உருமாறி வெளியேறினர். இந்திரன் குயிலுருவாய் மறைந்தான். அக்கினிதேவன் நா அறுப்புண்டான். சந்திரன் தேய்க்கப்பட்டான். தக்கன் தலையற்றான். மற்ற தேவர்கள் பல தண்டனையடைந்தார்கள். சூரியன் பற்கள் உடைபட்டான். கண் பிடுங்கப் பட்டான். "இந்துவினைத் தேய்த்தானை இரவிதன் பல்பறித்தானை" என்று அப்பர் காட்டுகிறார். பல்லும் கண்ணும் இழந்த சூரியன் பல இடங்களுக்கும் சென்று பெருமானது அசரீரியால் இத்தலத்துக்கு வந்து தீர்த்தத்தில் மூழ்கிப் பெருமானை வலம் வந்து வணங்கிப் பெருமான் அருளால், இழந்த கண்ணும் பல்லும் கிடைக்கப்பெற்றான். சூரியன் மூழ்கி வழிபட்டதால் சூரிய தீர்த்தம் என வழங்குகிறது. இதனல் தெய்வ நிந்தனையில் சேரலாகாது என்பது புலப்படுகிறது.

3. பிரமன் வழிபட்டது

பிரமன் மும்மூர்த்திகளில் ஒருவன். படைப்புத் தொழிலை மேற்கொண்டவன். சரஸ்வதிக்குத் தலைவன். இவன் ஒரு காலத்தில் ஐந்து முகங்கொண்டிருந்தான். படைப்புத் தொழிலால் கர்வங்கொண்டு தனக்குள் சிந்திக்கலானன். "சிவனைப்போல் நானும் ஐந்தலையுடையேன். அவன் அழித்தல் தொழிலைச் செய்கிறான், நானும் ஆக்குந் தொழிலை செய்கிறேன். அவனுக்குப் பார்வதி சக்தி. எனக்கு சரஸ்வதி சக்தி. இவ்வகையில் நானும் அவனும் ஒத்திருக்க எவ்வகையில் சிவன் சிறந்தவன்" என்று கர்வங்கொண்டு கைலையில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் தன் கொள்கையை நிலைநாட்டச் சென்றான். கர்வங்கொண்ட பிரமன் சிவ்பெருமானையும் மதியாமல் தன் கொள்கைகளைக் கூறித் தானும் சிவனும் ஒன்றெனக் காட்டினன். பெருமான் கோபங்கொண்டு தனது சக்தியால் அவனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைப் போக்கிப் படைப்புத் தொழிலையும் நீக்கினர். பிரமன்தான் செய்த பிழைக்கு வருந்திப் பெருமானிடம் மன்னிக்க வேண்டினன். பெருமான் அவனைப் பூலோகத்திலுள்ள நெல்லி வனத்திற்குச் சென்று வழிபட்டால் பாவம் நீங்கும் என்றார். பிரமன் பல தலங்களுக்கும் சென்று திருநெல்லிக்காவை அடைந்து திருக்குளத்தில் மூழ்கிப் பெருமானைப் பல காலம் வழிபட்டு வரவே, பெருமான் இடப வாகனத்தில் காட்சி கொடுத்துப் பிரமனுக்கு நான்கு முகங்களாயிருக்கவும், படைப்புத் தொழிலை மீண்டும் நடத்தவும் அருள் செய்தார். பிரமன் மூழ்கி வழிபட்டதால், பிரமதீர்த்தம் என வழங்குகிறது. இது அம்மன் சந்நிதிக்கு நேராக உள்ளது.

4. திருமால் வழிபட்டது

திருமால் திரிமூர்த்திகளில் ஒருவர். காத்தல் தொழிலை உடையவர். திருமகள் கணவர். உலகில் உயிர்களுக்குத் துன்பஞ் செய்யும் அசுரர்களைக் கொல்வதற்கு ஓர் படை வேண்டுமென்றெண்ணினார். சலந்தரன உடலைப் பிளந்த சிவபிரானது சக்ராயுதமே சிறந்ததென்று கருதி, அதைப்பெறத் திருவீழிமிழலை சென்று பெருமானை வழிபட்டார். தினமும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு பூசித்து வரும்போது ஒரு நாள் ஒரு மலர் குறையத் தமது கண்ணையே மலராகச் சேர்த்து வழிபட்டார். பெருமான் அவருக்குச் சக்கரப் படையை வழங்கினார். அப்போது பெருமான் அணிந்திருந்த தலைமாலைகளில் ஒன்று அதைக் கவ்வியது. திருமால் விடுவசேனனைக் கொண்டு விகடக் கூத்து செய்விக்கச் சக்கரப் படை கீழே விழ, விநாயகர் எடுத்துக்கொண்டார். அவருக்கும் விகடக் கூத்து செய்விக்க, விநாயகர் மகிழ்ந்து அவரை நெல்லிவனத்திற்குச் சென்று வழிபட்டால் சக்கரம் கிடைக்கும் என்றார். திருமால் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டுத் திருவாரூரைக் கடந்து திருநெல்லிக்காவை அடைந்து ஓர் தீர்த்தத்தில் மூழ்கிப் பெருமானை வழிபட்டு வந்தார். ஒரு நாள் தீர்த்தத்தில் மூழ்கி எழும்போது சக்கரப்படை கிடைத்தது. திருமால் தீர்த்தத்தில் மூழ்கிச் சக்கரம் பெற்றதால் சக்கரதீர்த்தம் என்று வழங்குகிறது.

5. திவ்யரூபன் வழிபட்டது

திவ்யரூபன் என்ற கந்தர்வன் பேடிகுள்ளவன். இசையில் வல்லவன். இசைக்குரிய ஏழு சுரங்களுக்கும் சப்தமாதர்கள் ஏழு பெண்கள் தெய்வங்க

ளாவர். ஏழு சுரங்களையும் அமைத்து இசை பாடி னல் சப்தமாதர்கள் மகிழ்வர். திவ்யரூபன் தனக் குரிய இசை வலியால் செருக்கடைந்து ஏழு சுரங் களையும் முறை தவறிப் பின்னப்படுத்திப் பாடத் தொடங்கினன். இவ்வாருகப் பல நாள் பாடிவரவே இசைத் தெய்வங்களாகிய சப்த மாதர்களும் பொறுக்கமாட்டாமல் திவ்யரூபனைப் பூமியில்பிறந்து குட்ட நோயால் வருந்தும்படி சபித்தனர். அவ் வாறே திவ்யரூபன் பூமியில் பிறந்து குட்டநோயால் வருந்தி ஊரூராய்த் திரிந்து முடிவில் திருநெல்லிக் காவை அடைந்தான். இத்தலத்தில் சுதன்மர் என்ற முனிவர் வாழ்ந்து வந்தார். அவருடைய பத்தினி பேரழகும், பெருங்கற்பும் உடையவள். முனிவரின் சிவபூசைக்குப் பணிவிடை செய்வாள். ஒருநாள் இவள் ஒரு தீர்த்தத்தில்மூழ்கிக் கரையேறி உலர்த்தும் வகையில் கூந்தலைக் கைகளால் தட்டி னள். ஒரு நீர்த்துளி திவ்யரூபன் மேனியிற்பட்டது படவே அவனது குட்டநோய் நீங்கிப் பேரொளி யுடையவனய்க் காணப்பட்டான். அப்போது சிவ பெருமான் அவனுக்குக் காட்சிகொடுத்தார். தீர்த்த நீர் உத்தமியின் கூந்தல் மூலம் பட்டு நோய் நீங்கப் பெற்றதால், இது ரோக நிவாரண தீர்த்தம் என வழங்குகிறது. இதனல் இசைகெடப் பாடுதல் கூடாது என்பது தெரியவருகிறது.

6. சந்திரன் வழிபட்டது

முன் 2வது கதையில் சொல்லப்பட்டபடி தக் கன் செய்த யாகத்திற்குச் சென்றவர்களில் சந்திர னும் ஒருவன். தேவர்கள் வீரபத்திரரால் தண் டனை யடைந்தார்கள். சந்திரனும் வீரபத்திரரின் பாதத்தால் தேய்க்கப் பெற்ருன். இவ்வாறு குறை யுற்ற சந்திரன் ஒளி மழுங்கித் துயருற்ருன். சிவ

பிரானுக்கு விரோதமாய்ச் செய்த யாகத்திற்குச் சென்றதால் இவ்வாறு நேர்ந்ததென்று மனம் நொந்தான். இதைப் போக்குவதற்குப் பரிகாரம் தேடினன். சூரியன் திருநெல்லிக்காவை அடைந்து தான் இழந்த பல்லும் கண்ணும் பெற்றதை நினைந்து இத்தலத்தை அடைந்தான். ஓர் அசரீரி உண்டாயிற்று. "சந்திரனே, அகஸ்தியர் பல பெருமைகளையுடையவர். வில்வலன் வாதாபியைக் கொன்ருர். கிரௌஞ்சத்தின் கர்வத்தை அடக்கினர். விந்திய மலையை அடக்கினர். கடலை ஆசமனஞ் செய்தார். தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்தார். அவர் தென்திசை நோக்கி வருகிருர். விநாயகரை வேண்டினல் அவர் அகஸ்தியரின் கமண்டலத்தைக் கவிழ்ப்பார். அது ஆருக ஓடி வரும். அதில் மூழ்கி வழிபட்டால் உன் கருத்து நிறைவேறும்" என்றருளியது.

சந்திரன் அவ்வாறே விநாயகரை நோக்கித் தவம் புரிந்தான். விநாயகரும் அவன் வேண்டுகோளுக்கிணங்கிக் காக வடிவங்கொண்டு சென்று குடகு நாட்டில் தங்கியிருந்த அகஸ்த்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்தார். அது நதியாக ஓடித் திருநெல்லிக்காவல் அருகில் தற்போதுள்ள விண்ணுருக வந்தது. சந்திரன் அதில் மூழ்கிப் பெருமானை வழிபட்டு மெய்யொளி பெற்று விளங்கினன். இந்நதி சந்திரநதி யென்றும், காகநதியென்றும் பெயர் பெறும். (காவிரி நதிக்குச் சொல்லப்பட்ட கதையே இதற்கும் வழங்குகிறது.)

7. சோழன் திருநகரங்கண்டது

திருவாரூரில் சிவபக்தியில் சிறந்த சங்கரசர்மன் என்னும் அந்தணன் வாழ்ந்துவந்தான். அவன்

தல யாத்திரை செய்யத்தொடங்கிப் பல பதிகளையும் தரிசித்துத் திருநெல்லிக்காவை அடைந்து பெருமானை வழிபட்டான். அப்போது நெல்லிவனமாய்ப் புலி கரடி முதலிய துஷ்ட விலங்குகளும் ஒற்றுமையாய் இருந்தன. தேவகணத்தார் வந்து அம்மையப்பரை வழிபட்டு விடியுமுன் சென்றனர். இந்த அதிசயங்களைச் சங்கரசர்மன் கண்டு திருவாரூர் சென்று சோழ அரசனுக்குத் தெரிவித்தான். சோழனும் கேட்டு மகிழ்ந்து தானும் தரிசிக்க எண்ணி ஒரு நாள் மந்திரி முதலியோருடன் புறப்பட்டுத் திருநெல்லிக்காவை அடைந்து பெருமானையும் தேவியையும் வழிபட்டான். தலம் வனமாயிருப்பதைக் கண்டு, காடு நீக்கி நகரமாக்கக் கருதினன். மந்திரியிடம் திருக்கோயிலும், திருநகரமும் அமைக்க கட்டளையிட்டான். மந்திரி பல வேலையாட்களின் உதவியால் சிவாகமவிதிப்படி திருக்கோயில் அமைத்தான். அந்தணர் முதலிய வகுப்பார்களுக்கும், மற்றையோர்க்கும் வீதிகளும்,வீடுகளும் அமைத்துக் கொடுத்தான். திருப்பணி முடிந்ததை அறிந்த சோழன் ஓர் நன்னளில் இறைவனுக்கும் இறைவிக்கும் கும்பாபிஷேகம் செய்வித்தான். இவன் பிற்காலத்தில் ஆமலகேச சோழன் எனப் பெயர் பெற்றான். இவன் இத்தலத்தில் ஓர் அரண்மனை அமைத்துத் தங்கியிருந்து பெருமானுக்கு நித்திய நைமித்தியங்கள் சரிவர நடைபெறச் செய்தான். இவனுக்கு ஓர் புதல்வன் பிறக்க, அவனுக்கு உத்தம சோழன் என்று பெயரிட்டுக் கல்வி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும்படி நடத்தினன். தக்க வயது வந்தவுடன் புதல்வனுக்கு முடிசூட்டிப் பல காலம் வாழ்ந்து பெருமான் திருவடியை அடைந்தான்.

8. மங்களாம்பிகை திரு அவதாரமும் திருமணமும்

உத்தம சோழன் பதுமமாலை என்பவளை மணந்து செங்கோல் செலுத்தித் தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் காத்துவந்தான். அரசனுக்குப் பல நாளாகப் புத்திரப்பேறில்லை. பல யாகங்களையும், தருமங்களையும் செய்தான். ஒருநாள் அரசனும் அரசியும் கோயிலுக்குச் சென்று மங்கள நாயகியின் சந்நிதியில் நின்று வேண்டினார்கள். அப்போது தேவியே மூன்று வயதுப் பெண்ணாகத் தோன்றி அரசன் மடியில் வந்து அமர்ந்தாள். அரசனும் அரசியும் மெய்ம்மயிர் பொடிப்பக் கண்ணீர் வாரக் குழந்தையை எடுத்தணைத்து உச்சி மோந்து முத்தமிட்டுப் பெருமகிழ்ச்சியுற்றார்கள். அரசன் தனக்கு அசரீரி கூறியபடி மங்கள நாயகி என்று பெயரிட்டு ஆண் குழந்தையைப் போல வளர்த்து வந்தான். மங்கள நாயகியும் வளர்பிறை போல வளர்ந்து பல விளையாடல்களைச் செய்தாள். யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளையும் பயின்றாள். உத்தமசோழன் ஓர் நன்னாளில் பல அரசர்களையும் வரவழைத்து மங்கள நாயகிக்கு முடிசூட்டிச் சில காலம் வாழ்ந்து இறைவன் திருவடியடைந்தான்.

மங்களநாயகி தன் தாயான பதுமமாலையின் ஆதரவில் செங்கோல் செலுத்தி அரசாண்டு வந்தாள். உலகமும் செழித்தது. தேவிக்குத் திருமணப் பருவம் வரவே தேவி மங்களநாயகி ஒருநாள் திருவாரூர் சென்று தியாகேசப் பெருமானைத் தரிசித்து நின்றாள். அப்போது பெருமான் ஆவணித் திங்கள் முதல் வெள்ளி நாளில் திருநெல்லிக்கா

வந்து திருமணம் செய்துகொள்வதாக அருள் செய்தார். பதுமமாலையும் நற்செய்தி கேட்டு மகிழ்ந்தாள். குறித்த நாளில் மந்திரியை அழைத்து நகரை அலங்கரிக்க உத்தரவிட்டாள். கோயிலையும், அரண்மனையையும் அழகு செய்தார்கள். நவரத்தினங்களாலாகிய திருக்கல்யாண மண்டபத்தை அமைத்தார்கள். திருமணத் திருமுகங்கள் அனுப்பப்பட்டன. திருவாரூர்த் தியாகேசப் பெருமானும் தாம் வாக்களித்தபடி மணவாளனய்ப் பல ஆபரணங்களைப் பூண்டு திருமாலும் பிரமனும் இரு பக்கத்திலும் வரப் பலரும் புடைசூழ, சங்கு, எக்காளம், திருச்சின்னம் முதலிய வாத்தியங்கள் முழங்கத் திருநெல்லிக்காவை அடைந்தார். மந்திரிகளும் மற்றையோரும் எதிர்கொண்டழைத்தனர். குறித்த நேரம் வரவே பெருமான் மணமண்டலத்தில் அமர்ந்தார். தோழியர் மங்களநாயகிக்குப் பல தீர்த்த நீரால் அபிஷேகம் செய்து பல அணிகளைப் பூட்டி அழகு செய்தார்கள். மங்களநாயகி இலக்குமியும் சரஸ்வதியும் இரு பக்கத்திலும் வரவும், மற்ற தேவ மாதர்கள் பல வரிசைகளை ஏந்தி வரவும் புறப்பட்டு வந்து பெருமான் பக்கத்தில் அமர்ந்தாள். மங்கள வாத்தியங்கள் முழங்க, மாதர்கள் சோபனம் பாட, மறையவர் வேதமிசைக்க, பதுமமாலை நீர் வார்க்கப் பெருமான் மங்கள நாயகியின் கழுத்தில் திருமங்கலிய தாரணம் செய்தார். வேள்வித்தீயும் வலஞ்சுழித் தோங்கியது. திருமால் முதலிய தேவர்களும், முனிவர்களும், மற்றையோரும் வணங்கிப் பேரானந்த மடைந்தனர். பூமாரி சொரிந்தனர். ஆண்டுதோறும் ஆவணி மாதம் முதல் வெள்ளியில் இந்தத் திருமண உற்சவம் நடைபெற்று வருகிறது.

இத்தலத்தின் பெருமைகளை அறிவிக்கும் பிற வரலாறுகளும் உண்டு. கோபம் மிகுந்த துர்வாச முனிவர் இத்தலத்தின் மூலமூர்த்தியாகிய ஆனந்த பஞ்சாட்சர லிங்கத்தைத் தரிசித்துக் கோபம் நீங்கப் பெற்றார். மேருமலையிலுள்ள பிரசண்டவாயசம் என்னும் காக முனிவர், ஷர்ஷானந்த முனிவருக்குத் திருநெல்லிககாவின் மகிமைகளை உபதேசித்தனர். வடநாட்டில் சிரவந்தி நகரத்தில் பிறந்த சுசன்மா என்னும் பிராமணன், தீய ஒழுக்கமுடையவனாய்த் தகாத செயல்களைச் செய்து பல இடங்களுக்கும் சென்று முடிவில் இத்தலத்திற்கு வந்து, தீர்த்தங்களில் மூழ்கி வழிபட்டு நற்கதியடைந்தான். தேவர்கள் பாற்கடல் கடைந்தபோது அமுதம் கிடைக்காமற்போகவே இத்தலத்து விநாயகரை வழிபட்டு அமுதம் பெற்றனர்.

இவ்வரலாறுகள் பக்தி நெறிக்கு வழிகாட்டிகளாகவும், சில தத்துவங்களை உட்கொண்டனவாகவும் அமைந்துள்ளன.

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப்பதிகம்

1 அறத்தாலுயிர் காவலமர்ந்தருளி
மறத்தான்மதின் மூன்றுடன் மாண்பழித்த
திறத்தாற் றெரிவெய்திய தீவெண்டிங்கள்
நிறத்தா னெல்லிக்காவுள் நிலாயவனே.

2 பதிதானிடுகாடு பைங்கொன்றைத் தொங்கல்
மதிதானது சூடிய மைந்தனுந்தான்
விதிதான் வினைதான் விழுப்பம் பயக்கும்
நெதிதா னெல்லிக்காவுள் நிலாயவனே.

3 நலந்தானவனுன் முகன்றன் றலையைக்
கலந்தானது கொண்ட கபாலியுந்தான்
புலந்தான் புகழாலெரி விண்புகழும்
நிலந்தா னெல்லிக்காவுள் நிலாயவனே.

4 தலைதானது வேந்திய தம்மடிகள்
கலைதான்றிரி காடிட நாடிடமா
மலைதானெடுத்தான் மதின் மூன்றுடைய
நிலைதா னெல்லிக்காவுள் நிலாயவனே.

5 தவந்தான் கதிதான் மதிவார் சடைமேல்
உவந்தான் சுறவேந்த னுருவழியச்
சிவந்தான் செயச் செய்து செறுத்துலகில்
நிவந்தா னெல்லிக்காவுள் நிலாயவனே.

6 வெறியார் மலர்க்கொன்றை யந்தார் விரும்பி
மறியார் மலைமங்கை மகிழ்ந்தவன்றான்
குறியாற் குறிகொண்டவர் போய்க்குறுகும்
நெறியா னெல்லிக்காவுள் நிலாயவனே

7 பிறைதான்சடை சேர்த்திய வெந்தை பெம்மான்
இறைதானிற வாக்கயிலைம் மலையான்
மறைதான் புலனெண் மதிமல்கு சென்னி
நிறைதா னெல்லிக்காவுள் நிலாயவனே.

8 மறைத்தான் பிணிமா தொருபாகந் தன்னை
மிறைத்தான் வரையாலரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேற் குளிர்கோல் வளையை
நிறைத்தா னெல்லிக்காவுள் நிலாயவனே

9 தழரு மரையான் வையந் தாயவனும்
கழருன் முடிகாணிய நாணெளிரும்
அழருனடியார்க் கருளாய்ப் பயக்கும்
நிழரு னெல்லிக்காவுள் நிலாயவனே.

10 கனத்தார் திரைமாண்டழற் கான்ற நஞ்சை
எனத்தாவென வாங்கியதுண்ட கண்டன்.
மனத்தாற் சமண் சாக்கியர் மாண்பழிய
நினைத்தா னெல்லிக்காவுள் நிலாயவனே.

11 புகரேது மிலாத புத்தேளுலகில்
நிகரா நெல்லிக்காவுள் நிலாயவனை
நகரா நலஞான சம்பந்தன் சொன்ன
பகர்வாரவர் பாவமிலாதவரே.

திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக் கோவை:

12 கொடுங்கோளூர் அஞ்சைக் களஞ்செங் குன்றூர்
கொங்கணங் குன்றியூர் குரக்குக்காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக்காவும்
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் ஏழூர் தோழூர்
எறும்பியூர் ஏராரும் ஏமகூடம்
கடம்பை இளங்கோயில் தன்னிலுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருநாட்டுத்தொகை:

13 நாளு நன்னிலம் தென்பனையூர் வடகஞ்சனூர்
நீள நீள்சடையான் நெல்லிக்காவு நெடுங்களம்
காளகண்ட னுறையுங் கடைமுடி கண்டியூர்
வேளார் நாட்டுவே ளூர்விளத்தூர் நாட்டு
விளத்தூரே.

சிவநாமக் கலிவெண்பா:

14 தருத்தங்கு—நெல்லிக்கா மேவு நிகழ்மங்கள மாது
புல்லுகின்ற நெல்லிவனப் புண்ணியா—

திருவாலவாயுடையார் திருவிளையாடல் :

15 குலந்தரும் நீதிமிக்க குணந்தரும் வேதஞ்சொல்லும்
பலந்தரும் உயர்ந்தசாயுச் சியந்தரும் பழுதிலாத
தலந்தரும் எல்லாம்வல்ல சயந்தரும் நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமைகுன்று நயந்தரு நமச்சிவாய

பெரியபுராணம். திருஞானசம்பந்தர் யாத்திரை :

16 நம்பர் மகிழ்திருவாரூர் வணங்கிப்போந்து
நலங்கொடிருக் காருயில் நண்ணியேத்திப்
பைம்புனல் மென்பணைத் தேவூர் அணைந்து
பரமர்திரு நெல்லிக்காப் பணிந்துபாடி [போற்றிப்
உம்பர்பிரான் கைச்சினமும் பரவித் தேங்கூர்
ஓங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும்போற்றிச்
செம்பொன்மதிள் கோட்டூரும் வணங்கியேத்தித்
திருமலிவெண் டுறைதொழுவான் சென்று சேர்ந்தார்.

திருநெல்லிக்காத் தலபுராணம் :

திருஞானசம்பந்தர்.

17 முதற்குழவி யாயதுதிக் கைக்குழவி
சூர்மாவை முருக்கும் வேற்கைக்
கதக்குழவி யேனையநற் குழவியெலா
மளித்தும்பால் கதுவ வூட்டா
விதத்துவரை யம்மைக்குத் தாமினிய
குழவியெனல் விளங்க அன்னாள்
இதத்துமுலைப் பாலளிக்கப் பருகுமறைக்
குழவிதாள் ஏந்தி வாழ்வாம்.

திருநாவுக்கரசர்.

18 பொன்னிறை செந்தழலுறிலப் பொன்னிறெளி
முன்னினுமேற் பொலிதல் போலப்
புன்னெறியார் நீற்றறையிற் புக்கவேயோ
ரெரிகொளுவிப் போந்த பின்னர்
முன்னையினும் கோடிமடங் கொளிர்சைவ
ஒளிவளர்ந்து முதிர வாய்ந்து
மன்னியமர்ந் தருளியசீர் வாகீசப்
பெருந்தகைதாள் வாழ்த்தி வாழ்வாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

19 கலவைதிரு நீருகக் கவினியபொற்
பணியக்க மணியாக் கோடல்
நிலவுமடி யார்செயலென் நுண்மைநூ
லுரைப்பதற்கு நேரே யாகக்
கலவைதிரு நீருகக் கவினியபொற்
பணியக்க மணியாக் கொண்டிவ்
வுலகுய்யத் திருத்தொண்டத் தொகைவகுத்தார்
பாதமலர் உன்னி வாழ்வாம்.

மாணிக்கவாசகர்

20 உடையவர் யாவையும் புலித்தோ லுடையவரே
அரிபிரமர் உம்பரேனே
நடைபெறுவ கிடப்பவெலா முடைமையே
என்னுமுரை நாட்டுவாராய்க்
கொடைமிகு கூடற்செழியன் குதிரைகொளக்
கொடுத்தபொருள் கொடுபோய்வானே
மடையுகளும் பெருந்துறையில் திருப்பணிசெய்
ஐயர்சரண் வழுத்தி வாழ்வாம்.

அறுபத்துமூவர்

21 அல்லையணி கண்டத்தர் ஆடகப்
பொன்னம்பலத்தே
இல்லவினை தரிசித்தார்க் கென்றுமறைச்
சிலம்பொலிக்கத்
தொல்லநடம் புரிதில்லத் தூயமறை யோர்முதலா
எல்லையிலாத் திருத்தொண்டத் தொகையடியார்
எமையுடையார்

22 நெல்லி வனம்மேவும் நித்தன் திருவடியைப்
புல்லும் மனதுடனே போற்றிளுல்—தொல்லை
வினைத்தொகுதி யாவும் விரைந்தோடும் கண்டீர்
எனைத்தும் துயரமினி ஏன்.

* ஆசிரியர்.

23 வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்
வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம்
எல்லாம்.

(கந்தபுராணம்)

மண்டபங்களில் எழுதப்பெற்ற நீதிமொழிகளில் சில :—

கடவுள் என்பது கருணையின் வடிவே.
அறிவுடையவர்கள் அனைவரும் ஓர்குலம்
மலர்ந்த முகமே வாழ்வின் இன்பம்
தானஞ் செய்யுமுன் நிதானம் வேண்டும்
நினைக்கத் தனக்கு நிச்சயமாய்வரும்.

போதுமென்ற மனமே பொன்செயும் மருந்து
எம்மதியிருப்பினும் நிம்மதி வேண்டும்
அன்பே கடவுள் ஊன்றிக்கவனி
சமயங்காணச் சத்தே கடவுள்
பணத்தைச் செலவிடினும் குணத்தைச்
செலவிடாதே
தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பார்
காலை உலாவல் காலுக்குப் பலம்
மூல சுத்தியால் தூலஞ்சுகமுறும்
நன்மையை நாடித் தீமையை விலக்கு
கோபத்தால் ரத்தம் கொதித்துக் கொல்லும்
சாந்த குணத்தால் சகலமும் நன்மை
மனம்போல் வாழ்வு இனம்போல் அறிவு
கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

திருநெல்லி இறைவர் திருத்தாள் போற்றி.

பார்வையாளர் குறிப்பு

I had the pleasure and fortune of Visiting this temple to-day and I was emmensely impressed with the serene and holy atmosphere of the temple and the orderly and neat maintenance of the premises. I find the executive officer yong, enthusiastic and energetic and the administration of the temple Very satisfactory, as far as a flying Visitor could be.

(Sd) V. KARTHIKEYAN, I. A. S.,
17—5—56.
District Collector, Tanjore.

I Visited the temple to day and offered worship. The temple and the presiding deities offer attraction to the worshippers. The premises are perfectly clear as they ought to be in a sacred shrine like this. The executive officer is enthusiastic in maintaining the temple in perfect order and Condition. The newly installed duty "Sri Mahalaxmi" is specially attractive.

(Sd) SUNDRAM,
12—2—56
Thasildar, Mannargudi.

A Visit to this sacred temple to-day evening brings to me before my mind's eye the goddess Minakshi of Madurai.

The idols Vigneswara, Lord Muruga with the Alanka of Lord Palanianda and the Lord Siva and Goddess Mangalambika ware as gods descended from Heaven to shower their choicest blessings to the Humanity. The gurukkal and the assistants do their duty with devotion.

Above all the young executive officer takes keen interest in the worshippers, explains in detail. The puranic love concerning this Sthalam and treats one and all with brotherly feeling.

Under his regime I firmly believe that the administration of the temple will being peace, prosperity and Gods grace to all the worshippers and a green memory always of this god and goddess Mangalambikai.

(Sd) Malayappan,

22—1—56

Deputy Commercial Tax Officer,

Mannargudi.

Q23;38. 21193
N56

திருநெல்லிக்காவல் ஸ்ரீ நெல்லிவனநாத ஸ்வாமி தேவஸ்தானம்

வருமானம் வருஷம் 1க்கு வரக்கூடியது உத்தேசம்.

1.	வருஷம் 1-க்கு நஞ்சை நிலம் குத்தகை கூடுதல்படி நெல் 3267ா,க்கு கிரயம்	ரூ.	20000	0	0
2.	புஞ்சை தோப்பு தென்னை மரக் குத்தகை கூடுதல்படி	ரூ.	1675	0	0
3.	இதரதோப்புகள் மகசூல் இலுப்பை புளி வகையரு	ரூ.	500	0	0
4.	கட்டடம். கடைகள் வாடகை வருமானம்	ரூ.	650	0	0
5.	மனைப்பகுதி வருமானம்	ரூ.	450	0	0
6.	மோகினி வரவு	ரூ.	87	8	0
7.	வட்டி ஆதாயம்	ரூ.	100	0	0
8.	கட்டளை வரவு	ரூ.	400	0	0
9.	உபயம்	ரூ.	500	0	0
10.	பாசி குத்தகை ஆதாயம்	ரூ.	150	0	0
	ஆக	ரூ.	24512	8	0

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
112781

2c
18 | 4
83
4-26

SOUTH INDIA PRESS, KARAIKUDI.